# DEPOSITION OF WITNESS

**(Chapter XXIII, Cr.P.C)**

**IN THE COURT OF I ADDITIONAL DISTRICT COURT, RANIPET**

Case No. **SC.No.92/2022**
Prosecution: **PW9**

Deposition of the witness of **LW16**

| | | | |
|---|---|---|---|
| Name | திரு.சுரேஷ் | District | இராணிப்பேட்டை |
| Father Name | திரு.குமரவேல் | Occupation | கட்டிட வேலை |
| Village /Area | சர்வந்தாங்கல் | Age | 43 |
| Taluk | ஆற்காடு | Aadhar card No. | 7450 8898 6710 |

Solemnly affirmed in accordance with the provision of Evidence Act X of 1872 on the day of **05.03.2026.**

எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**<u>முதல் விசாரணை:</u>**

நான் ஆற்காடு தாலுக்காவிலுள்ள சர்வந்தாங்கல் கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் கட்டிட வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளில் 3-ம் எதிரி கிரிவாசன் என்பவரை மட்டும் எனக்கு தெரியும். மற்ற இரண்டு எதிரிகளையும் எனக்கு தெரியாது. இந்த வழக்கில் இறந்து போன நாகேந்திரன் மற்றும் காயம்பட்ட ரகுவரன் ஆகிய இருவரும் என் ஊரை சேர்ந்தவர்கள். 4 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் எங்கள் ஊரில் மாரியம்மன் கோவில் திருவிழா நடந்த போது நான் என் வீட்டில் இருந்ததேன். அன்று இரவு 8.00 மணியளவில் தகராறு நடந்த சத்தம் கேட்டு நான் சென்று விசாரித்த போது சாமி ஊர்வலத்தில் தகராறு ஏற்பட்டதாகவும், அதில் பாட்டில் மீது நாகேந்திரன் விழுந்ததில் அவருக்கு காயம் ஏற்பட்டதாகவும், ரகுவரன் என்பவருக்கு அவரது வீட்டில் கண்ணாடி ஜன்னலை உடைத்த போது கையில் காயம் ஏற்பட்டதாகவும், அவர்கள் இருவரையும் மருத்துவமனைக்கு அழைத்து சென்றிருப்பதாகவும் கேள்விப்பட்டேன். பின்னர் இராணிப்பேட்டை எஸ்.எம்.எச் மருத்துவமனைக்கு சென்று நான் விசாரித்த போது நாகேந்திரன் இறந்துவிட்டதாக நான் கேள்விப்பட்டேன். இறந்து போன நாகேந்திரனின் பிரேதம் மீது வேலூர் அரசு மருத்துவமனையில் வைத்து காவல் ஆய்வாளர் பிரேத விசாரணை மேற்கொண்ட போது சாட்சியாக உடனிருந்து கையெழுத்து போட்டேன். போலிசார் என்னை விசாரித்தனர்.

(சாட்சி அரசு தரப்பு வழக்கிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காததால் அவரை பகுதியாக பிறழ் சாட்சியாக பாவித்து அரசு தரப்பில் குறுக்குவிசாரணை செய்ய அரசு தரப்பு வழக்கறிஞர் அனுமதி கேட்டு, சாட்சியை குறுக்குவிசாரணை செய்ய அனுமதி வழங்கப்படுகிறது.)

**<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை:-</u>**

காவல் ஆய்வாளர் என்னை விசாரித்த போது 27.07.2021-ம் தேதி எங்கள் ஊரில் நடைபெற்ற திருவிழாவின் போது ஏற்பட்ட தகராறில் எதிரிகள் மது பாட்டிலால் நாகேந்திரனின் கழுத்திலும், ரகுவரனின் கையிலும் குத்தி காயப்படுத்தியது பற்றி நான் விசாரித்து தெரிந்துகொண்டதாக கூறிவிட்டு தற்போது உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:-</u>** இல்லை

BALAKRISHNAN
Digitally signed by BALAKRISHNAN
DN: cn=BALAKRISHNAN, ou=GOVERNMENT OF TAMILNADU, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN

I Additional District & Sessions Judge,
Ranipet.